# ஆதி மார்க்க னீதி மொழி

**September 2026**

***இதழ் 62 – செப்டம்பர் மாதம் 2026 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



**மூலமந்நிரம்**
முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**
சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்ஙல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!
எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர் பாதத்துடன் ஆதி மார்க்க னீதி அவையின் மின்னணு சஞ்சிகை 01-08-2026 தேதி முதல் 30-08-2026 வரையிலான தேதிகளில் 13 அவை மற்றும் மூன்று இசை வகுப்பு நிகழ்வுடன் 62ஆவது இதழாக மெய்ம்மணம் கமழ மலர்ந்துள்ளது.

இதனுள் பொதிந்திருக்கும் பொக்கிஷங்கள்:

மயனத்துள் மயனமாக நின்று விளங்கும் சின்மயத்துடன் இரண்டறக் கலந்து வாழ்வதே மனுவுக்கான ஜீவேசத்தகை வாழ்வு. அதற்கான கொண்டல் வாய்மையை கலிமா எனும் பெரும் முத்தாக மாற்றும் வல்லபம் உள்ளவனே மனு. உலகம் தோன்றிய காலம் முதல் அவதரித்து வரும் பெரியோர்களின் வேத வாக்கான அசரீரியே சத்து-சித்து-ஆனந்தம் ஆன மூன்றையும் திரிசூலி எனும் சச்சிதானந்த மயமாக ஆக்க வல்ல பேரொளி ஆகும்.

வாழும் காலத்தில் சாவருமுன் சாகப்பழகி அடைய வேண்டிய அதி உன்னத நிலையான முத்தியை மனுவானவன் பெற வேண்டி அவனது கல் மனதை உழுது, பண்பட்ட நிலமாக மாற்றி, அதில் வித்தில்லா வித்து ஊன்றி மெய்ஞ்ஞானப் பயிர் முளைக்கச் செய்கின்ற ஆசானே சொல்லேர் உழவர் என்ற பதத்திற்கு உரியவர். நமது எண்ணம் பல கோடியாய் விரிந்து எமன் வசம் போகாமல் ஓர் நினைவாகி சிவன் வசம் செல்ல, பாரவான்கள் தங்களின் நாவாஸ்திரம் கொண்டு நம் நவக்கிரகங்களை வெட்டி வீழ்த்தும் செயலே அசுர வதமாகும். நம் அறியாமை அஸ்தமிக்க நிகழ்ந்த அவதாரமே கிருஷ்ண ஜெயந்தியின் உண்மை நிலையை எடுத்து உரைக்கும் கோகுலாஷ்டமி.

நம் ஜீவ சுதந்திரத்தைப் பறிக்கும் கைபேசியின் சாதக பாதகங்களும் அதில் நமக்கு இருக்க வேண்டிய உஜார் ஜாக்கிரதை பற்றியும் விளக்கிய நமது அவையின் அங்கமாகிய கோபிநாத் சீர் சிறப்புடன் வாழ எனது ஆசீர்பாதங்கள். இப்படியான நவீன கால பாதகங்களில் இருந்து நம்மைக் காப்பது மெய் வணக்கமே. நால் வகை யோனி எழுவகை தோற்றத்தின் மறை பொருளான ஆவிடை எனும் தேவயோனியில் குருபிரான் தயவால் நாம் மறுபிறப்புப் பிறக்கும் ரகசியத்தை வெளியாக்கும் செயல் உள்ள ஓர் அருமையான அவதார நிகழ்வே மிலாடி நபி எனும் மீலாதுன் நபி ஆகும்.

தமிழில் இடையினமாகிய நடுவின் சிறப்பை அறிந்தவரே இடைக்காடர். சிவன் எனும் வாடாத தீபமாக நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கும் அறிவின் நிலையே காவி நிறம். காவியே நிஜமான ஜீவனாகும். மகாபலிச்



Copyright © AMNA Trust, Chennai

**சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்ட வாமன அவதாரத்தின் நோக்கம், அரசனின் அகங்காரம் அழித்து அவனது சிரசில் திருவடி தீட்சை வழங்குவதாகும். இப்படியான தேவ ரகசியச் செயலானது கால காலங்களாக ஒரு கதையின் மூலமும் *ஊரகத்தான் நீரகத்தான் காரகத்தான் திருக்கார்வானம்* என்பதின் ரகசியமாக உலகளந்த பெருமாளின் சிறப்பாக 108 திவ்ய தேசங்களுள் ஒன்றான காஞ்சிபுரத்திலும் உள்ளது.**

**தற்கலை பீர்முகம்மது ஒலியுல்லா அப்பா அவர்களின் தீர்க்க தரிசன பாடல்கள் மற்றும் நம் வேத பாடல்கள் பலவும் சஹானா ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி வழங்கிய நமது அவையின் இசை ஆசரியை லாவண்யா சீர் சிறப்புடன் வாழ எனது நல் ஆசீர்பாதங்கள்.**

**இப்படியான தேவ நிகழ்வுகள் அனைத்தையும் வெளியாக்கும் ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகையைப் பார்த்தும் படித்தும் கேட்டும் வருகின்ற நன் மக்கள் யாவரும் நல்ல கதி நிலையான தேவாதி தேவனின் திருவடி நிழலில் போய் கலக்க வேண்டும் என எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*குருகொண்டலாகிய எமது ஐயன், எம் முகம்பார்த்து இப்படித் திரும்பினார்களானால், எமது எலும்பு துடிக்கும். அப்பேர்க்கொத்த அன்பேறும் உள்ளச்சமே எம்தலையில் இந்த மெய்யை இவ்வளவு வல்லபமாக ஏற்றிவைத்துள்ளது. னீங்கள் எம் முன்னர் பேசாமல் உட்கார்ந்நிருக்கும் இந்த ஊமைக்கொட்டை குணத்தால் உங்களுக்கு மெய்ப் பலன் கிட்டாமல் போவதோடல்லாமல் மேற்கொண்டு உங்கள் ஐயனை அலக்ஷியம் செய்த பாவம் உங்கள் தலையில் வந்து விழுகிறது. அப்படி அடிக்கடி னாள்தோறும் விழ விழக் கடைசியில் அறிவு பிடுங்குபட்டுப் போய்விடும். உஜார்...*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 ஆகஸ்ட் மாதம் அவை நிகழ்வுகள் – 2026 செப்டம்பர் மாதம் வெளியீடு

### 01-08-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அடங்கலொ டுங்குமி டம்பட னின்றவ…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* அருட்குருவின் அன்பெனும் பிடியில் அகப்படும் தருணமே நாம் மெய் நெறிக்குள் நுழைகிறோம். அசலான இறைபொருளை அறிவதற்கான நகலே சாஸ்திர சம்பிரதாயங்கள் என்பதை மெய்யறிவு பெற்ற பின்னரே அறிய முடியும். படைத்தல் முதல் அருளல் வரையிலான ஐந்தொழிலையும் புரியும் குருவே, முப்பதி. அவர் அருளும் தெவிட்டாத தெள்ளமுதமே நம் செவியுள் நுழைந்து, மயனத்துள் மயனமாக நின்று விளங்கும் சின்மயத்துடன் இரண்டறக் கலக்கச் செய்து ஜீவேசத்தகை வாழ்வில் நம்மைக் குடியேற்றுகிறது.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண் : 241 (தொடர்ச்சி)**

வேதத்தில் சத்தும் அசத்தும் கலந்து இருக்கிறது. அசத்தை னீக்கிச் சத்தை மாத்திரம் தருகின்ற ஜீவன் முக்தர்களின் வாக்கே வேதாந்தம்.

*ஜீவ சகோதரர் சங்கர்:* ஓர் எதார்த்த தேவ குருவைச் சந்தித்த பின்னரே, ஐயறிவுக்கும் கீழான நரனாக நாம் இருப்பதை அறிகிறோம். அவர்களின் ஆவிடை எனும் தேவ யோனியில் மறு பிறப்புப் பெற்று மனுவாய் மாறிய கணம் முதல், அறிவுப் பூப்பு உண்டாகி, அசத்தாகிய நம் மனம் சத்தாக மாறுகிறது. ஓதாமல் ஓதும் வேதத்தின் மெய்ச் செயலைப் பழகித் தேர்ந்திட பாற் கடலைக் காய்ச்சி வடித்தெளித்திட்ட வேதாந்தத்தை அருளும் ஆசானின் பெருங் கருணை வேண்டும்.

*ஜீவ சகோதரர் கோபிநாத்:* **கைபேசி விழிப்புணர்வு:** கைபேசியின் அதிநவீன தொழில் நுட்பத்தால் தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும் எளிதாகிறது. ஆயினும் கவனக் குறைவால் நமது தொடர்புகள் மற்றும் முக்கிய தகவல்கள் நாம் அறியாமல் திருடப்பட்டு எளிதில் மோசடிக்குள் சிக்க வாய்ப்புள்ளது. தேவையின்றி மற்றவர்களிடம் நம் கைபேசியைக் கொடுக்காமலும், விளம்பர மோசடிகளில் சிக்காமலும், கடன் அட்டை வாங்குவதிலும், கடன் வழங்கும் செயலி பதிவிறக்கம் செய்வதிலும் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும்.

**பரிசுத்த வேதாகமம்: கொரிந்தியர் 1:3 திருவசனம் - 6 முதல் 10 வரை**

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:* நிஜ தேவத் தெய்வமாக வரும் பெரியோர்களின் பேரன்பே நம்மைச் சிவமாக்கும். மேல் நோக்கான அமானிதம் எனும் சீதனப் பொருள் பெற்று வந்த மனிதன், தன் அழிஅவா இச்சையினால் கீழ் நோக்கான நரகத்தையே நாடிச் செல்கிறான். அவரவர் நாமத்திற்குரிய பொருளே சுயம்பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபமாகப் பிரகாசிக்கிறது. இறைவனை அன்னியமாக எண்ணித் துவைதத்தில் இருந்த நம்மை, அனன்னியமான அத்வைதத்தில் மாற்றி வைப்பவரே வரதகுரு. சர்வ மதங்களின் அடினாதமாகிய மறலி கை தீண்டாமை எனும் அருட்பெருஞ் செயலில் மக்களை வாழ வைக்கும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 02-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தனித்தனற் றலைமைப் பெரும்பதி யரசை…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரி விஜயலஷ்மி:*
மழைத்துளியை முத்தாக மாற்றும் மறுப்படாச் சிப்பி போல் கொண்டல் வாய்மையை கலிமா எனும் பெரு முத்தாக மாற்றும் வல்லபம் உள்ளவனே மனு. கடல் நீரின் அசுத்தங்களை நீக்கும் உப்பு போல், பிறவிக் கடலில் சிக்கிய மனுவின் அறியாமை அசுத்தத்தை நீக்கும் உப்பே ஆசானின் வாய்மை. அதுவே நம் பவக் கடலைக் கடத்தும் வல்லபம் உள்ளதாகும்.

*ஜீவ சகோதரி லாவண்யா:*
குருவைச் சரணடைந்த மனுவே ஆறாம் அறிவாகிய அமானிதம் கொண்டு பிறவிக் கடலை கடக்க முடியும். வான வேதாந்தச் சஞ்சீவியாக வரும் ஆசானின் நாதமே நம்மை நற்கதிக்கு ஆளாக்கி அறிவுத் துலக்கம் பெறச் செய்து மரணமிலாப் பெருவாழ்வில் குடியேற்றுகிறது.

*ஜீவ சகோதரி ஹேமலதா:*
மனம் பூரிக்கப் பாவமும், அறிவு பூரிக்கப் புண்ணியமும் கைவரவாகும். குருவிற்கு இணங்கி நடப்பதே அக புற வாழ்விலும் நம் ஜீவனுக்கான நன்மை பெற்று நித்தியத்தை அடைய ஏதுவாகும். ஈமான் கோட்டையின் இருப்பறிவித்து, இருதயத்துள் இலங்கும் ஈசனைத் தரிசிக்க வைக்கும் தெய்வீக எல்லையே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் கார்த்திகேயன் (பம்மல்):*
வினையால் விளைந்த பொய் தேகத்தின் உள்ளே இறைவன் இருக்கும் இருதயக் கமலமே மெய் என உணர்த்தும் விக்ன விநாயகரே குரு பெருமான். ஆசானின் திருவடி பணிந்து அவர் அருளால் இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆகி வாழ்வதே அசலான மெய்வாழ்வு.

*ஜீவ சகோதரர் சீனிவாசன் (மடிப்பாக்கம்):*
ஏட்டினில் இருந்து பேசும் இருந்தவ மந்திரத்தைக் கூட்டினில் னிஜமாக்குபவரே குருபிரான். தன்னையறிய தனக்கொரு கேடில்லை என்பதை அனுபவமாகப் பெறுதலே ஞான வாழ்வு. ஆறிரு சமயத்திற்கும் அறிவுரைத் தெய்வமாக வரும் குரு பெருமானின் பேரிரக்கத்திற்கு சற்பாத்திரனாக வாழ்ந்தால் மெய்ப்பலன் கிட்டும்.

*ஜீவ சகோதரர் தியாகராஜன்:*
திருஅவதாரம் தாங்கி வரும் குரு பெருமானின் அருளமுதம் நம் செவியில் நுழைந்த கணமே நம் அறியாமை இருள் விலகி அறிவுச் சுடர் பிரகாசிக்கும். அரை நொடிக்குள் மலமகற்றும் தீட்சையை அருளி, மாயை மறலியின் கையில் சிக்காது நம்மை காக்கும் திருத்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 06-08-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் னரராய்த் தோன்றி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**



உலகம் தோன்றிய காலம் முதல் அவதரித்து வரும் பெரியோர்களின் வேதவாக்கே அசரீரி. நற்றாளாகிய திருவடியே இயற்கை உண்மைக் கடவுளாக நின்று மனுத் தலையைக் காத்து இரட்சிக்கிறது. மெய்ப் பொருளைத் தன்னுள் தரிசித்துப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்காக வந்தவனே மனு. மனம் எனும் மாளிகைக்குள் பொதிந்திருக்கும் அறிவு மாணிக்கத்தைக் கைக் கொண்டவர்கள் காலமற்ற எல்லையில் குடியேறி சிவபுரத்துச் செம்மலாக வாழ்வர். கோடி ஒளி காந்தி வீசும் காருண்ய பீடத்தில் அமர்ந்து, திருச்சிற்றம்பலப் பொருளுடன் இரண்டறக் கலந்து வாழும் ஆத்மனே அழியாமை அடைவான். ஒழுக்க சீலத்துடன் ஓதாமல் ஓதும் செயலில் பழகித் தேர்பவர்கள் பரமபத நித்திய மகிழ்ச்சியில் திளைத்து, மரணமில்லாப் பெருவாழ்வு பெறுவது சத்தியமே.

*ஜீவ சகோதரர் சங்கர் :*

ஆறாவது அறிவின் லட்சணம் அறிந்தவனே மனு. எதற்கும் முதற் பொருளாகிய ஜீவனை அறிதலே தன்னையறிதல். மனிதனின் சுத்தத் துறை இருதயத்துள் உறைந்துள்ள இறைவனைக் காண வைப்பரே காருண்யப் பிரான். இறைத் தேடுபாடுடைய எதார்த்த உள்ளம் கொண்ட மக்களுக்கு குரு தரிசனம் கிட்டுகிறது. குருவாக்கே சிவவாக்கு என உணர்ந்து மெய் வணக்கத்தில் பழகித் தேர்பவர்கள் சிவானுபவம் பெற்று ஞானத் தெளிவுடன் வாழ்வர். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற அறியாமையை வேரறுத்து, தெய்வீக ஆடலங்களின் மூலம் நம் அறிவுக் கண்ணைத் திறப்பிக்கும் தண்டகாரண்யமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 08-08-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் திருவடி போற்றி **உலகநிலை முழுதாகி ஆங்காங்கு உள்ள உயிராகி...** எனும் அருட்பா பாடலுடன் அவை இனிதே உதயமானது.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:**

ஆசான் அருளும் செவிச் செல்வமே நம் அகத்துள் பாய்ந்து செம்பொருளைத் தரிசிக்க வைக்கிறது. உடல், உயிர், ஆன்மாவின் இரகசியமே மனுத் தலையுள் முப்பொருள்க் கோல மெய்ம்மை விளக்கமாக உள்ளது. சத்து, சித்து, ஆனந்தம் எனும் மூன்றும் ஒன்றாகி சச்சிதானந்த மயமாக நிற்கும் பேரொளி ரகசியமே திரிசூலி. குளவியின் ரீங்கார ஒலியால் புழு குளவியாவது போல் ஆசானின் நாத ஒலியால் நரன் மனுவாக மாறுகிறான்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண் : 242** நம்மை ஈசன் படைத்து வேதத்தையும் தந்து அதில் நாம் நடக்க வேண்டிய நேர் பாதை போட்டுக் காட்டி இருக்க அதை விட்டு நாம் தள்ளுபட்ட கடையர்களைப் போல் விருதாவாகச் சுற்றி வருகிறோம்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

மனிதன் வாழ வேண்டிய நேர்பாதையை அறிவிப்பதே, வேத வேதாந்தங்கள். ஐம்புல நுகர்வின் உணர்வை அறிந்து, அவற்றைக் கடந்த ஆறாவது அறிவின் மூலம் தன்னை அறிதலே மனிதப் பிறவியின் நோக்கம். ஆசான் அருளால் ஐந்து அவத்தைகளும் கடந்து ஆவிப் பொருளாய் நிற்கும் மூல மந்திரத்தைத் தன்னுள் கண்டு அதனுடன் இரண்டறக் கலப்பதே அறமாகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:*

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளம்போல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்**

என்ற வள்ளுவர் வாக்கின்படி, இன்றைய டிஜிட்டல் உலகில் நாம் கடன் அட்டையை உபயோகிப்பதில் மிகுந்த கவனம் வேண்டும். நமது வருமானம் மற்றும் திருப்பிச் செலுத்தும் திறன் உணர்ந்து *சிறுகக் கட்டிப் பெருக வாழ்வதே* நிம்மதி தரும் என அறிந்து வாழ்வதே அறிவாகும்.

**பரிசுத்த வேதாகமம் : கொரிந்தியர் அதிகாரம் 1:3 - திருவாக்கியம் 11-16 :**

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*

சற்குருவின் திருவாக்கே மெய்ஞ்ஞானத்தின் அஸ்திவாரம். புலன் வழி ஓடி பாவத்தில் நம்மைச் சிக்க வைக்கும் மனம் ஓர் காருண்யப் பிரானின் தயவால் அறிவாக மாறி புண்ணியத்தில் சேர்க்கிறது. குருவின் தயவால் சிவன் பாதம் மேவுதல் மூலமே நம் வினை தீரும். மனித தேகாலயத்துள் மறைந்துள்ள மாமணி ஜோதியனாகிய இறைவனைத் தரிசிக்க வைக்கும் திருச்சபையே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் கௌதம் :*

பூமியில் நாம் வாழும் குறுகிய காலத்துக்குள் மெய்ப் பொருளை அறிய வேண்டும். அதற்கான அருந்துணையே அறிவு வடிவாக வரும் மெய்க்குருபிரான். அவரின் அருளால் சார்ந்ததின் வண்ணமாக மாறும் மனதை ஒரு முகமாக்கும் செயலே மெய் வணக்கமாகும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*

பனி மலையின் குளிர்ச்சியை அனுபவித்தவர் உணர்வது போல் குருவின் அருளாலும் அனுபவத்தாலும் உணர்வதே ஞானம். இறைவனின் சாயலாகிய மனு ஓர் ஆவிப் பொருள் என்பதை ஆசான் அருளால் ஞானக் கண் திறந்த பின்னரே அறிய முடியும். அவரது அருளால் அழியாத நித்திய தேகத்தில் குடியேறி வாழ்வதே அறிவுடைமை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai September 2026

## 09-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அரண்டிடும டத்தாருப தேசமத ழிம்பெனக் கண்டு…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரி லதா உதயசூரியன் :*

வலிமை, அறிவு, கல்வி, கலை, மதிப்பு, மகிழ்ச்சி என சர்வத்தையும் தருகின்ற இலஞ்சிய லட்சிய உயிரைக் காட்ட வல்லவரே மெய்க் குருபிரான். உயிரான பிராணனின் சூட்சுமத்தை பரிசுத்த ஆவியின் மூலம் அறிந்து அடைவதே மெய்வாழ்வு. உயிரைத் தேடி வந்த உடல் கொண்டு, ஒரு தலைமுறைக் காலம் நம் சிரசில் வீற்றிருக்கும் உயிரைத் திரும்பிப் பார்க்கும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவ சகோதரி லக்ஷ்மி வஜ்ரவேல்:*

உடல் சார்ந்த வாழ்வில் கவனத்தை விட்டு, உயிரின் மீது கவனம் செலுத்துவதே மேன்மை. அலைபாயும் நம் மனதை, ஆசான் அருளால் அறிந்தால் அலைவின்றி அழிவின்றி அறிவாக மாறும். அழியும் பொருளின் மீதுள்ள அவாவை விட்டு அகத்தில் உள்ள அழியாப் பொருளில் கவனத்தை நிலைபெறச் செய்வதே நித்திய வாழ்வாகும்.

*ஜீவ சகோதரி கனகலக்ஷ்மி :*

நரன், மனு, தேவன் இவர்களது அடையாளத்திற்குரிய பொருள் அவரவரின் வாக்கே. அறிவாகார சொரூபரின் திருவடிகளில் சரணடைந்து, அகந்தை நீங்கி நம் நாமத்திற்குரிய பொருளை அறிந்து கிட்டுவதே ஆத்ம ஞானம். கணித்தற்கரிய குருபிரானைக் கணிப்பதை விட்டு அவரிடம் நமது முப்பொருள் தத்தம் செய்து வாழ்வதே மெய் வாழ்வு.

*ஜீவ சகோதரி முத்துலக்ஷ்மி சீனிவாசன் :*

இறை தரிசனம் காண அருளப் பெறும் ஒரு மொழியே குருமொழி. வாழும் காலத்தில் சாவருமுன் சாகப் பழகி நாம் அடைய வேண்டிய அதி உன்னத நிலையே முத்தி. ஆசான் அருளால் நம் எண்ணம், சொல், செயல் மூன்றாலும் நன்மை செய்வதே நம்மை நிர்க்குணத்தில் ஆக்கும். தன்னை அறியும் செயலில் நம்மைப் புகுத்தாட்டும் பரமகுருவின் இருதயப் பிரகாச அருளொளி மூலமே நாம் பிறவாமை பெற முடியும்.

*ஜீவ சகோதரர் பாலா (காஞ்சிபுரம்):*

குரு அருளால் நெற்றிக்கண் திறக்கப் பெற்றுப் பழகித் தேர்ந்த சாகாக் கல்வி மூலம் அறிவதே வேதங்களின் உட்பொருள். தன்னை ஆளும் எஜமானைக் கவனிக்கும் ஜாக்கிரமும், இந்திரியங்கள் இன்றி அனுபவிக்கும் சொப்பனமும், பிராணன் சித்தமுடன் இயங்கும் சுழுத்தியும் உடலும் உயிரும் உள்ள பேருறக்கமும், ஆன்மா மாத்திரமே இருக்கும் உயிர்ப்படங்கல் நிலையுமான ஐந்து அவத்தைகளும் நீங்க ஆசான் அருளும் செயலே பிரம்ம வித்தை.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*

வள்ளுவப் பெருந்தகை அருளிய அறிவுடைமை எனும் திருக்கொரலின் படி அறிவே நம் அடையாளம். அதுவே நம் உயர்ந்த உடைமை. மெய்க் குருவின் அருளால் அறிவின் லட்சணம் உணர்ந்து வாழ்வதே அசலான மெய்வாழ்வாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 13-08-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. முத்துலட்சுமி சீனிவாசன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **சொல்லரிய னால் வேதம் அங்கம் ஆறும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

காலச் சக்கரத்தின் சுழற்சியால் நம் பொய்யுடல் மாறினாலும், மெய்யுடல் என்றும் மாறாமல் நிலைத்திருக்கும். மனிதனின் தத்துவ ரகசியத்தை உணர்த்தி, கடத்தின் உள்ளிருக்கும் கடவுளைத் தரிசிக்க பெரியோர்கள் உண்டாக்கியதே ஆலய சிலாரூபங்கள். ஒரு பிரம்மநிஷ்டரிடம் சரணடைந்து அறிவெனும் ஆயுதத்தைப் பெற்று, வைராக்கிய சித்தத்துடன் சாகாக்கலை பழகித் தேர்வதன் மூலமே முத்தி கிட்டும். மனுத் தலைக்குள் பொதிந்திருக்கும் தேவ ரகசியச் செயலே, மகா விஷ்ணுவின் பத்து அவதாரம் மற்றும் 108 திவ்ய தேசங்களின் தாத்பரியம் என்பதை ஆசான் அருளால் அறிவதே மெய்ஞ்ஞானம்.

**எமன் படர் அடிபடு திரு மெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் : 16 (தொடர்ச்சி)** முன் வந்த செம்மல்கள் அப்பர், சுந்தரர், மணிவாசகப் பிரான், வடலூர் வள்ளல் பிரான் அனைவரும் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்து பனிரெண்டு வருடங்கள் ஆசானிடம் பூரண ஒட்டுதலோடு, அரும்பாடுபட்டதால் தான் அவர்களுக்கு மெய்ஞ்ஞானம் கிடைத்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மெய்ஞ்ஞானச் செம்மல்கள் அருளிய திருப்பாடல்கள் யாவும் இன்றளவும் நம் செவிகளில் ஒலித்து கொண்டிருப்பதே, அவர்கள் நித்திய சூரியர்களாக வாழ்ந்து கொண்டு இருப்பதற்கான சாட்சியாகும். பெரியோர்கள் சர்வத்தையும் விட்டு, ஆசானே கதியெனப் பின்தொடர்ந்து, முப்பொருள் தத்தம் செய்து பல காலம் அரும்பாடுபட்டு மெய்யைப் பெற்றார்கள். ஏனெனில் பாரவான்களின் கைம்முதலாகிய அறிவுப் பெட்டகத்தைப் பெறுவதற்கு மிகுந்த பாடுபட வேண்டும்.

சைவத்தில் இதையே உழவாரப்பணி என்றார்கள். தன் சொல் மூலமாக மனுவின் கல் மனதை உழுது, பண்பட்ட நிலமாக மாற்றி, அதில் வித்தில்லா வித்து ஊன்றி மெய்ஞ்ஞானப் பயிர் முளைக்கச் செய்கின்ற ஆசானுக்கே சொல்லேர் உழவன் என்ற பெயராகும். **கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்** எனும் மெய்ச்செயல் நிஜமாகும் எல்லையே ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவியின் ஆக்ஞையின் படி மேலான புண்ணிய தர்மத்தை அளந்து கொண்டிருக்கும் அருட் குருவின் பாதம் பணிந்து வாழ்வோரே புண்ணியர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 16-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வரந்நரு வாயில் னிற்பர்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரி பானுமதிகுமரேசன்:*

எழுத்தறிவிக்கும் இறை குருவே திருவெனும் அட்சரப் பொருள். அட்சரத்தால் உண்டானதே உயிர்த் தமிழும், வேத வேதாந்தமும். உடல் அழியும் முன்னர் உயிரின் உபாயம் அறிந்து வாழ இறைவன் மனுவுக்குத் தந்த சீதனமே ஆறாம் அறிவு. நம் வயது வாழ் நாள்



Copyright © AMNA Trust, Chennai 

வீணாகாமல் காத்து இறை திருவடி சேர்ப்பது கோளரி வாளராகிய குரு கொண்டலின் இரக்கமே.

*ஜீவ சகோதரி ஜெயலக்ஷ்மி:*

வேத வேதாந்த ரகசியங்களின் பெட்டகமாகத் தூலம் தாங்கி வருபவர்களே மெய்க் குருபிரான். கீழ் நோக்கமான நம் மனதின் எண்ணங்களை மேல் நோக்கமான அறிவின் நிலையில் ஏற்றி வைக்கும் குருவின் செயலே பிரம்ம வித்தை. உயிர் வளர்க்கும் உபாயம் அருளி, சுருதி முடிவான பொருளை துலங்கச் செய்து பிறவாமை எனும் பெருவாழ்வு அளிக்கும் தெய்வீக எல்லையே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் சுகுமார்:*

குருபிரானே நம் மெய்ஞ் ஞானத் தாகம் தீர்க்கும் தடாகம். மரணமிலாப் பெருவாழ்வு பெற்று வாழும் வகை அருள்வதே வந்த வேதம். குரு சொன்ன ஆசனத்தில் அமர்ந்து வைராக்கியமுடன் பழகித் தேர்பவரே மெய்ஞானம் பெறுவர். வேத வேதாந்த வாக்கியங்கள் செயலாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் துரைமுருகன்:*

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே** என வள்ளல் பிரான் அருளிய படி, பிறவிச் சுழலில் தவிக்கும் நம்மை ஆட்கொண்டு, நிழலாடும் பீடத்தில் ஏற்றி இளைப்பாறுதல் அளிப்பவரே இறைகுரு. மாதா, பிதா, குரு, தெய்வமாக நம்மை வழி நடத்தும் வள்ளலின் மகிமையை அறிவதற்கு வேதமே சாட்சி.

*ஜீவ சகோதரர் அருண் கம்பராஜன்:*

மனிதனுக்குத் தெளிந்த ஞானம் அருளும் நித்திய வழியே மெய்வழி. அமானிதப் பொருளின் மெய்ம்மை இரகசியத்தை அருளி, பொய் மெய்யைப் பிரித்துக் காட்டும் வல்லபம் மெய்க்குரு ஒருவருக்கே உண்டு. எண்ணம் பல கோடியாய் விரிந்த எவரும் எமன் வசமாகவும், குருவின் அருளால் ஓர் நினைவாக இருக்கும் எவரும் சிவன் வசமாகவும் ஆவது திண்ணம்.

**குருபிரான் அருளமுதம்:**

**அறிகின்ற அறிவே அறிவு** எனும் வேத வாக்கினை குருகுல வாசமாகப் பழகித் தேர்ந்தவரே அறிவர். மெய்யான குரு பிரானின் அருளால் வாசனை, கேள்வி, இரு கண், வாய் எவைக்கும் வல்லமை அளிக்கும் அறிவுக் கண்ணானது திறப்பிக்கப் பெற்று, இன்னது இன்னதென இன்னதுக்கு இன்னதென ஓர் வகை, மூவகை, ஐவகை, எண்வகைப் பொறுப்பும் உள்ளத்தில் உரிமையுற தன்னுள் அறிந்து அடைவதே ஜென்ம சாபல்யமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 20-08-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துலங்ங இங்ங எவர்க்குமெட்டா னிலைக ளெல்லாம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சர்வ வேதங்கள் உணர்த்தும் சத்திய வாழ்வை மக்களுக்கு அருள மலர்ந்ததே மெய்வழிச்சபை. சத்திய சுத்தராம் குருவள்ளலின் செங்கோலானது நம்மை ஓதாமல் ஓதும் மெய்ச் செயலில் பழக்கி, பொல்லா இருள் மனதைப் பொடித்து எரித்துப் பேரின்ப உயர் ஞானம் அருள்கிறது.



Copyright © AMNA Trust, Chennai

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் - 16 (தொடர்ச்சி)**
**குருபிரான் அருளமுதம்:** உடல் பொருள் ஆவி தத்தம் செய்து பெற வேண்டிய ஞான சட்டத்தை மாற்றி எளிதாக ஞானம் பெற வகை செய்தது ஆண்டவர்களின் ஓயாத தவத்தின் பலனாகும். ரூபத்தில் வந்துவிட்ட மனிதனுக்கு ரூபம் தாங்கி வரும் ஓர் மெய்க்குருவே தவப்பலன் இன்னதென உணர்த்த முடியும். இதை மறுப்பவனே அந்தரங்க நாஸ்திகன். ஒரு தவமேருவின் பெருங் கருணையே, பட்சிக்கும் அக்கினியான மனதை ரட்சிக்கும் அக்கினியான அறிவாக மாற்றும். முன் வந்த முத்தர்கள் மூடி மறைத்த மெய்ம்மை ரகசியத்தை அம்பலமாக்கி ஜீவரட்சிப்புப் பரிசை மக்களுக்கு அருள்பவரே அம்பலவாணர். பாரவான்களின் தவத்தில் விளைந்த வேத வேதாந்தங்களை ஓதுவதன் மூலமே, நம் உள்ளத்தில் மெய்ஞ்ஞானப் பயிர் வேரூன்றி செழித்து வளர்கிறது.

உருவம், அருவம், அருவுருவம், சொரூபம் எனும் நான்கு தேக ரகசியமே உஜூதின் செயலாக வேதத்தில் அருளப் பெற்றுள்ளது. யுகந்தோறும் வரும் பாரவான்கள் தங்கள் நாவாஸ்திரம் கொண்டு நவக் கிரகங்களை வெட்டி வீழ்த்தும் செயலே அசுர வதமாகும். நம் அறியாமை அஸ்தமிக்க நிகழ்ந்த அவதாரமே கோகுலாஷ்டமி. ஜீவனின் நிறம் காவி என உணர்த்தும் அடையாளமே தீபம். போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத் தலையின் சிறப்பைத் தன்னுள் கண்டு தரிசித்தவரே மெய்ஞ்ஞானி. **தீட்சையது நூலாகும் நூல் விளக்காம் திறமான சற்குரு சொல் உபாயமாகும்** எனும் சிவானந்த போதம் பாடலின் படி, சற்குருநாதரின் சொல்லுக்கு இணங்கி, வைராக்கிய ஒழுக்க சீலராக வாழ்ந்து ஆண்டவர்களின் அருட்பெருஞ் செயலை நன்மக்களிடம் சேர்ப்பதே நம் கடமையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .

## 22-08-2026 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **அறிவாள னாகியே பணியறுத்தே...** எனும் சிவானந்த போதம் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரர் வடிவேலன்:*
குருவின் அருளால் அறிவை அறிபவனே அறிவாளன். அக உலகில் அச்சமற்ற மெய்வழியில் வாழ்வோரே ஆன்றோர்கள். ஆறாம் அறிவை அறியாத நரனே அச்சமுள்ள புறவாழ்வு வாழ்கிறான். குருவின் மலர்த்தாள் பற்றி, அற்றம் காக்கும் கருவியான அறிவை அறிந்தவனே மனிதன். மரணமிலாப் பெருவாழ்வாம் பேரின்பத்தில் நம்மைக் குடியேற்றி வைப்பதே அறிவு. நாளும் கோளும் அகற்றி நற்கதி அருளும் மலர்த் தாள் மூலமே பிறவிப்பிணி தீரும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் – 243 :** ஜீவன் முத்தர் வாக்கின் வலிமை அளவிடக் கூடாதது. ஒருவன் பிறர் பழிக்கத் தக்கவனாய் இருப்பினும், ஒரு ஜீவன் முத்தர் அவனைப் பார்த்து னல்லான் எனின் அவன் அப்படியே ஆவான்.

*ஜீவ சகோதரர் சங்கர்:*
உலக வாழ்வில் அசலை விரும்பும் யாவரும் தெய்வ வழிபாட்டில் நகலையே அசலாகக் கருதுகின்றனர். ஆலயங்களின் அகமிய ரகசியங்களை ஜீவன் முக்தர்களின் வல்லமையுள்ள வாக்கால்தான் அறிய முடியும். வினையின் மூலம் வந்த பிறவிப் பிணியாகிய பேதமை தீர அறிவு வடிவாக வரும் ஆசானின் அருளே துணையாகும். லாபம் மாத்திரமே உள்ள மெய்ஞ்ஞான வாழ்வின் உச்சமே சகிப்புத் தன்மை. நீதி எனும் பொருள் ஆன மனுவே நித்திய



Copyright © AMNA Trust, Chennai 

வாழ்வுக்கு உரியவன். உயிருக்கும் மேலான ஒழுக்கம் சார்ந்த வாய்மைத் துலக்கம் அருளும் குருவின் நேரான நெறி முறையில் வாழ்வோரே அறிவுத் தெளிவுடன் இருப்பர். குருவின் அருளால் வேத வழிப்படி வாழும் வாழ்வே எமன் எல்லையில் வெற்றி தரும்.

*ஜீவ சகோதரர் கோபிநாத்:* **கைபேசி விழிப்புணர்வு:**

ஈர்ப்பின் மூலம் நம்மை அடிமையாக்கி நம் ஜீவ சுதந்திரத்தைப் பறிக்கும் சாதனமே கைபேசி. இதில் இருந்து நம்மை விடுவிக்கும் செயலே மெய் வணக்கம். மிக மிக அவசியம் இன்றி கைபேசியைப் பயன் படுத்தாமல் இருப்பதே நலம். கைபேசி மூலம் செய்யும் பணப் பரிமாற்றத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

**பரிசுத்த வேதாகமம் : கொரிந்தியர்-1 அதிகாரம் 3 : 17-23**

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:* பரிசுத்த மனித தேகமாகிய தேவ ஆலயத்தைக் கெடுக்கும் ஒருவனை தேவன் கெடுப்பார். மனிதன் தன் ஆறாம் அறிவை அறிவதற்கே பெரியோர்கள் அவதாரம் தாங்கி வருகிறார்கள். ஒரு மொழியாம் குரு மொழியான மெய்ப்பாலை அறிவதற்காக மனுவிற்குத் தரப் பெற்றதே வயதும் வாழ்நாளும். கர்த்தர் ஆகிய குருவின் சொற்படி நடப்பவர்களே தெய்வப் பதம் அடைவர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 23-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே வுருவெடுத்துப் பாரிடைக் குருவாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**

ஜீவனே, உகாரப் பொருளாக சின்முத்திரை வடிவில் மனுத்தலைக்குள் உள்ளது. உயிரெழுத்தில் நெடிலாக, மெய்யெழுத்தில் ஓசையாக வரும் தன்மை கொண்டதே இடையினம் என்பது தமிழின் சிறப்பாகும். இதனை செயலாக அறிந்தவரே இடைக்காடர். தந்தையிடத்திலும் தாயிடத்திலும் உள்ள சுக்கிலமும் நாதமும் சேர்ந்து உண்டாகும் மானிட ஜென்மம் போல் மெய் ஆசான் மற்றும் சீடனின் உறவால் தோன்றுவதே அறிவுத் தேகம்.

*ஜீவ சகோதரி மணிமொழி:*

நகலான புற வழிபாட்டில் இருந்து நம்மை அறிவுப் பிறப்பில் ஆக்கி அசலான இறைவனைத் தன்னுள் தரிசிக்க வைப்பவரே மெய்க்குரு. சர்வத்திராளும் அனுபவிக்கும் எமவாதை தீர்வதற்கு குருவருளால் மனுவாகி ஆவிடை எனும் தேவ யோனியில் ஏழாம் பிறப்பு எடுக்க வேண்டும். ஆசான் தயவால் அறிவுக் கண் திறந்த பின்னரே, சாகாத்தலை எனும் நமது சொந்த தேகத்தை அறிய முடியும்.

*ஜீவ சகோதரர் செல்வம் (காஞ்சிபுரம்):*

ஆசானின் நாதமே செவிச் செல்வமாக நம் செவிகளில் நுழைந்து பிரகாச ரூபமாகிய மூல மந்திரத்தைக் கண்டு தரிசிக்கச் செய்கிறது. இதனைச் செயலாக ஆக்கி வைக்கும் அரும்பெரும் அவையே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் ராஜா:*

துக்க நிவர்த்தி சுகப்பிராப்தி என்பது மெய்க் குருபிரான் கருணையால் பெறும் உயிருக்கான ரகசியமாகும். ஒன்றில் ஒன்றுவது என்பது ஏகாட்சரத்தில் மெய் வணக்கத்தின்



Copyright © AMNA Trust, Chennai

மூலம் ஒடுங்குவதாகும். அகர உகர மகாரமாகிய "நான்" என்பதை ஈதல் இசைபட வாழ்தல் வாயிலாக தனக்கு உவமை இல்லாதான் தாள் சேரும் போது மனக் கவலையற்ற வாழ்வு கைவரவாகும்.

*ஜீவ சகோதரர் பூபாலன்:*

மெய் ஆசான் அருளும் பிரம்மவித்தை மூலமே மெய் மெய்யாகும். மானெடுங் காலங்களாக மக்கள் புழக்கத்தில் இல்லாத பிரம்ம வித்தைச் செயலானது, இன்று ஆதிமார்க்க னீதி அவையின் அடி நாதமாக பிரத்தியட்ச செயலாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

*ஜீவ சகோதரர் யுவராஜ்:*

பரிசுத்த ஆவி மூலம் மறுபிறப்புப் பெற்றே அறியாமையினுள் இருக்கும் அறிவை அறிய முடியும். ஆசானிடம் இருந்து வரும் அரிய வரவினைத் தடுப்பதே மேட்டிமை எனும் கொடுந் தரித்திரியம். அதிர்ஷ்டத் தலை உள்ளோரே மெய்யான குருபிரானை அடைகின்றனர். வேத வேதாந்தங்களின் வாசகங்கள் செயலாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் கௌதம்:*

வித்தில்லா வித்தின் மூலம் அந்நாட்டிற்கான வித்தினை எடுத்துப் பலன் ஓங்கச் செய்பவரே மெய் ஆசான். அப்படியான திருச்செயல் நடைபெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை ஆகும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*

மெய் அனுபவம் கைவரவாக வைராக்கியமும் ஒழுக்கமும் வேண்டும். சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி மனதைச் செலுத்துவதில் மிகுந்த கவனமுடன் இருந்தால் சொர்க்கபதி வாழ்வு வாழலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவையின் நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

## 27-08-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வாழ்வனைத்தும் தந்நெனது குலமுழுதும் தனையாண்டு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**

உலக உற்பனத் தாயாகிய சந்திரனின் அடையாளத்தை வைத்தே திருவிழாக்கள் கொண்டாடப் பெறுகிறது. மிலாடி நபி, ஆவணி அவிட்டம் என்ற சடங்குகள் யாவும் அடி முடி நடுவின் ரகசியமே ஆகும். நித்தியனாகிய இறைகுருவால் படைக்கப் பெற்ற மனுவே நித்தியன். தந்தையிடம் இருந்து பனித்துளியில் பாதி வடிவாகப் பண்டி புகுந்து வருகின்ற நான் எனும் பழம் புராதன ஆத்மன் சிற்றணு வடிவாக, விந்ததனில் நாதமாக நம் தலைக்குள் நின்று விளங்குகிறான். **கண்ணுக்கு மறைந்திருக்கும் ஹக்குல் எக்கீன் கமலம லரிரு தயவடிவம்** என சாலை ஆண்டவர்கள் அருளிய பூரணப் புதையல் பாடலின் படி, நம் புறக்கண் கொண்டு காணக்கூடிய தோற்றம் அனைத்தும் அழியும். ஆனால் அகக்கண் கொண்டு காணும் தோற்றமில்லாமை எனும் அரூப வடிவ இறைவன் என்றும் அழியாதவன்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரர் தாமோதரன் :*

குருபிரான் தயவால் ஆவிடை எனும் தேவ யோனியின் மூலம் நாம் மறு பிறப்பு பெறும் ரகசியமே மிலாடி நபியாகும். மெய்ஞ்ஞானச் செம்மலின் அருளால் கண்ணும் காதும் நேர் பெற்று, மெய் வணக்கம் பழகித் தேர்ந்த மக்களே ஜென்ம சாபல்யம் அடைகிறார்கள். தான் பெற்ற மெய்ஞ்ஞானத்தை, தன்னைச் சார்ந்த மக்களுக்கும் அளிப்பதே தர்மங்களுக்கு எல்லாம் மேலான தர்மமாகும்.

**திரு மெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் : 16 (தொடர்ச்சி)**

**குருபிரான் அருளமுதம்: யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்** என திருமூலர் பிரான் அருளியவாறு, தாம் பெற்ற பேரின்பத்தை எக்காலமும் வருகின்ற பெரியோர்களும் மக்களுக்கு அருள்கிறார்கள். அவர்கள் வாழும் ஞான வாழ்க்கைக்கு ஏற்ப தீர்க்க தரிசனச் செயல்களும் வந்து பொருந்திக் கொள்கின்றது. அறிவைத் திருமணம் செய்து வாழ்பவரே பனி மதி மங்கை பங்கன். மானெடுங் காலம் கொண்ட இப் பூ மண்டலத்திற்கே - பாரவான்களின் தீர்க்கதரிசனச் செயல் கைக்கொண்டேறி வருவதற்கு பினாகம், கோதண்டம், சாரங்கம், என்பவை பெரியோர்கள் தண்ணீரை ஆயுதமாகக் கொண்டு வந்த அகமியச் செயலைக் குறிப்பதாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவையின் நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

## 29-08-2026 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓங்காரத் தொனியான கபாலத்தே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரர் கௌதம்:*

*சிவாயநம என சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை* எனும் வேத வசனத்தின் மெய்ச் செயலை உணர்த்தும் உத்தமரே குருபிரான். அவர்களின் ஓங்காரத் தொனியே நம் செவிகளில் பாய்ந்து மெய் உணர்வைத் தூண்டுகிறது. பரம தயாளரின் அருளால் பாத வாழ்வு பெற்றுச் சின்னஞ்சிறு வாசலுக்குள் நுழைந்தால், சிற்றணு வடிவினனாகிய ஜீவனைத் தரிசிக்கலாம். ஆறாவது அறிவின் உன்னதத்தை உணர்த்தி அசலான கயிலாயத்தில் குடியேற்றும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 214**

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*

நீதி எனும் அவரவரின் நாமத்திற்குரிய பொருளைத் தன் எனும் ஜீவ குகைக்குள் நுழைந்து தரிசித்த மனுக் குலமே ஜாதி மதங்களின் மெய்மையை அறிவர். ஆசான் அருளால் ஓதாமல் ஓதும் செயலைப் பழகித் தேர்வதன் மூலமே சாவுக்கு எட்டித் தீ வைக்கும் ஜாதியராய் வாழ முடியும். எம வாதையை விலக்கும் ஜாதிமானின் ஓர் சொல்லில் தான், ஜாதியின் அடையாளமும் செயலும் உள்ளது. ஆசான் அருளால் பிரம்ம வித்தை பழகி அந்தரங்க நாஸ்திகத்தனம் அற்று, ஜாதி கெட்ட பாவி எமனின் பிடியில் சிக்காதவரே ஜாதியின் மேன்மையை அறிவர்.

*ஜீவ சகோதரர் கோபிநாத்:* **கைபேசி விழிப்புணர்வு :**

டிஜிட்டல் உலகில் பல நன்மைகளுடன் பல வித வலைத் தள மோசடிகளும் உள்ளதால் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நாம் அறியாமல் நமது தகவல்கள் திருடப் படுகின்றன. குக்கீஸ் எனும் செயலிகள் மூலம் நாம் கண்காணிக்கப் படுகிறோம். தேவையற்ற அழைப்புகளைத் தவிர்ப்பதுடன் நமது தனி உரிமைத் தகவல்களைப் பகிராமல் மிக்க கவனமுடன் இருக்க வேண்டும்



Copyright © AMNA Trust, Chennai September 2026

**பரிசுத்த வேதாகமப் பகிர்தல்: கொரிந்தியர் 1:4 1 முதல் 5 வரை:**

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*

குருவினிடம் உண்மையாக இருப்பவரே உக்கிராணக்காரன் என்பதாம். கர்த்தரின் தயவின் மூலமே சுவிசேஷ நற் செய்திகளின் மெய்ப் பொருளை அறிய முடியும். கரை காண முடியாத ஞானத்தை ஆணவ மலம் அறுத்தே அறிய முடியும். கர்த்தரின் தீர்ப்பு நிஜமாகவும், மற்றவரின் தீர்ப்பு அற்ப காரியமாகவும் உள்ளது. தன்னை அறியச் செய்யும் கர்த்தரின் தயவே நம் அறியாமை அகற்றி அறிவைப் பிரகாசிக்கச் செய்கிறது.

*ஜீவ சகோதரர் சங்கர்:*

அறிவின் பிரகாசமே கோடி சூரியப் பிரகாசம். பிதா சுதன் பரிசுத்த ஆவியாக மனுத் தலைக்குள் இருக்கும், அறிவு வடிவாகிய தெய்வத்தின் திருநாமத்தை ஓங்கி உரத்த குரலில் வையகத்தில் அறிவிக்கும் செயலே பரோபகாரம். ஆசான் திருமுகத்தில் மறுபிறப்புப் பெறுவதே புதுமனைக் குடியேற்றம் ஆகும். சிவன் எனும் வாடாத தீபமாக ஜீவ அக்கினியாக நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கும் அறிவின் நிலையே காவி நிறமான ஜீவனாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 30-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

வித்து நாயகம் ஸ்ரீலஸ்ரீ மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவையின் நிகழ்வுகள் இனிதே உதயமாகின.

**குரு பிரான் அருளமுதம்:**

நால் வகை யோனியில் ஒன்றான வித்திலிருந்து வந்த நம்மை வித்தில்லா வித்தின் மூலம் அந்நாட்டிற்கான வித்தாக எடுப்பவர்களே வித்து நாயகம். வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் கீழும் இல்லாத நடுவாக உள்ளது. தேகமே நான் எனும் எண்ணம் கொண்ட நரனின் மனமே அலை பாய்கிறது. உடம்பிற்கான தேவைகள் கடந்த ஒன்றாக இருப்பதே அதனை இயக்கும் உறுபொருள். ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் பொழுதே மனதின் தாகம் மோகம் யாவும் தீர்கிறது.

*ஜீவ சகோதரர் மணிவண்ணன்:*

இல்லற வாழ்வின் இன்ப துன்பம் கடந்த இணையற்ற மெய் வாழ்விற்கான துணை மெய்யான குரு பிரானே. எம பயம் தாண்டாத தூல வாழ்வைத் துச்சமாய் எண்ணி எம பயத்தைக் கடத்தாட்டும் ஜீவ வாழ்வை உச்சமாக எண்ணி வாழ்வதே வாழ்வாகும். மூச்சு லயமாகிய மனோலயம் தரும் மெய் ஆசானின் நாதமே ஜீவன் கண்ட ஜென்ம சாபல்யம் அருளும் அறவழியாகும்.

*ஜீவ சகோதரி சரஸ்பதிவண்ணன்:*

நரனாகத் தோன்றிய நம் அறியாமையை அகற்றி ஆறாவது அறிவை அறியச் செய்பவரே குரு பிரான். அவர்களே நாற்காரண ராஜ நிலையான மெய் வழியில் நம்மைப் பழக்கி தன்னை அறிதல் எனும் நமது நாமத்திற்கானபொருளை அறியச் செய்கிறார்கள்.

*ஜீவ சகோதரி உமாராணி:*

முக்குணங்களால் வேறுபடும் மனிதனின் ஐம்புல நுகர்வில் சமரசம் சமாதானம் சமத்துவம் யாவும் ஒன்றாகவே உள்ளது. உயிர் ஒட்டிய ரகசியமான இதனை ஆசான் அருளும்



Copyright © AMNA Trust, Chennai

சாகாக் கல்வி மூலமே அறிய முடியும். புலன் வழி பற்றி ஓடுகின்ற அடங்காத மனம் ஆசான் அருளால் அடங்குவதே அடக்கம்.

*ஜீவ சகோதரி பாலஅபிராமி:*

கேரள தேசத்தில் அறுவடைக் காலத்தில் திருவோண நட்சத்திரத்தில் வருவதே ஓணம் பண்டிகை. மகாபலிச் சக்ரவர்த்தியிடம், மூன்றடி நிலம் கேட்ட வாமன அவதாரத்தின் நோக்கம் அரசனின் அகங்காரம் அழித்து அவனது சிரசில் திருவடி தீட்சை வழங்குவதாகும்.

*ஜீவ சகோதரர் அருண்:*

குருவின் அருளால் வேத சாட்சியாக அகம் அறிந்து தெளியும் செயலுள்ள அவையே ஆதிமார்க்க னீதிஅவை. முக்கடவுளரும் மனிதனிடம் முக்குணமாக மனமாகவும், பஞ்ச பூதங்கள் அகமியத்தில் பஞ்ச பூதியங்களாகவும் உள்ளது. ஆசான் அருளால் மெய் வணக்கத்தில் நவ மணிப் பதிகளின் செயல்களைக் கவனிப்பதே தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் செயலாகும்.

*ஜீவ சகோதரி கோமதி:*

ஜீவனுக்கான தமிழ்த் தாலாட்டே பிள்ளைத் தமிழ். தேவ யோனி எனும் செவிச் செல்வத்தின் வாயிலாக அரு உருவாய் நம்மை ஆள்வது மெய்க் குருபிரானின் நாதமேயாகும். தூலத் திருமேனி தாங்கி வரும் பெரியோர்களே தங்களின் ஓரிதழ் தாமரையால் திருவடி தீட்சை அருளி ஏகாட்சரம் எனும் ஏக பதத்தில் நம்மை ஏற்றி வைக்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**02-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓங்நாரத் தொனியான கபாலத் தேசிறு வழியறியார்...** எனும் **ஞான முறையீடு** பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அருளிய படி, தற்கலை பீர் முகம்மது ஒலியுல்லா அப்பா அவர்களின் தீர்க்க தரிசனப் பாடலான **கெஞ்ச வைத்த சுக்கூரிலே...** எனும் திருப்பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**09-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயி ரறியா...** எனும் **ஞான முறையீடு** பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. வேத பாடல்களை சஹானா ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**23-08-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்...** எனும் **ஞான முறையீடு** பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. சென்ற வாரத் தொடர்ச்சியாக வேத பாடல்களை சஹானா ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai 

## 2026 – ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 14-08-2026 ~ வெள்ளிக்கிழமை

குருபிரான் திருமுன்பாக 14.08.2026 வெள்ளிக்கிழமை மாலை சரவண நந்தவன வளாகம் மெய் ஆலயத்தில் மங்கையர் பொங்கலிடும் மாலை பானைப் பலி திருவிழா நடைபெற்றது.





### 15-08-2026 ~ சனிக்கிழமை

குருபிரான் திருமுன்பாக 15.08.2026 சனிக்கிழமை காலை சரவண நந்தவன வளாகம் மெய் ஆலயத்தில் கொடியேற்றும் வைபவமும் தொடர்ந்து கூழ் வார்க்கும் திருவிழாவும் நடைபெற்றது.

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **04-10-2026 / சென்னை ஞாயிற்றுக்கிழமை** | ஞானபிதா, குருகொண்டல், **சாலை இரவி அப்பா** அவர்களின் **அவதாரத் திருனாள்** சென்னையில் வெகு சிறப்பாக நிகழ உள்ளது. |
| **04-10-2026 / சென்னை ஞாயிற்றுக்கிழமை** | குருபிரான் திரு முன்பாக ஆதி மார்க்க னீதி அவையின் செயலாளர் திரு.மணிவண்ணன் அவர்களின் பேரக் குழந்தைகள் **சித்தார்த்தன், நிரஞ்சன்** இவர்களின் **பிறந்தநாள் விழா** சென்னையில் நடைபெற உள்ளது. |
| **24-10-2026 / திண்டிவனம் சனிக்கிழமை** | குருபிரான் திரு முன்பாக திண்டிவனம் சரவண நந்தவனத்தில் அமைந்துள்ள மெய்ஆலயத்தில் **இரவு அவை** நடைபெற உள்ளது. |
| **25-10-2026 / திண்டிவனம் சனிக்கிழமை** | குருபிரான் திருமுன்பாக காலை 7.30 மணிக்கு கொடியேற்றும் வைபவமும் தொடங்து மாபெரும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் **கணேஷ் கிருஷ்ணன் - அன்னபூரணி** அவர்களின் மகள் **இன்பனிதியின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழா**வும் கொண்டாடப்பெற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 ஆகஸ்ட் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 69**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***
*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 62 – Month: September 2026*



*Copyright © AMNA Trust, Chennai* 